எந்த அளவில் ஜனத்தொகை இருக்கவேண்டும். இதன் படி பார்த்தால் வேறு எந்த மாவட்டத்திலும் மலைசாதியினர்களுக்கு என்று ப்ளாக் அமைக்கக்கூடிய ஜனத்தொகை இல்லை. சேலம் மாவட்டத்தில் மட்டும் ஏற்காடு கொல்லி மலைப் பிராந்தியத்தில் இவ்வாறு ப்ளாக் அமைக்க இருக்கிறோம்.

திரு. து. ப. அழகமுத்து : பச்சை மலையில் ஜனத்தொகை அதிகமாக இருப்பதனால் அதை ஒரு ப்ளாக்காக ஏற்படுத்த முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேலம் மாவட்டத்தைத் தவிர மற்ற எந்த இடத்திலும் மலைசாதியினருக்கு என்று ப்ளாக் ஏற்படுத்தக் கூடிய ஜனத்தொகை அந்தச் சமூகத்தாரிடம் இல்லை.

திரு. ஜி. டி. பெருமாள் ராஜு : தாளவாடி மலைப் பிரதேசத்திலுள்ள மலைசாதியினருக்கு என்று தனியாக டிரைபல் ப்ளாக் ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு நம் மாநில சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்காரின் திட்டத்தின்படி இந்த மாநிலத்தில் சேலத்தில்தான் ப்ளாக் ஏற்படுத்த முடிவு செய்யப் பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் எதிலும் அந்த அளவு ஜனத் தொகை மலைசாதியினர் கிடையாது.

திரு. ஜே. மாதா கவுடர் : இப்போது இருக்கிற முறைப்படி வேறு எந்த இடத்திலும் ட்ரைபல் ப்ளாக் என்று ஏற்படுத்த ஜனத்தொகை இல்லை என்று இருப்பதனால் இந்த ஜனத்தொகை அளவைக் குறைக்க மத்திய அரசாங்கத்திற்கு நம் மாநில சர்க்கார் சிபார்சு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நீலகிரியைப் பொறுத்த வரையில் பன்னிரண்டாயிரம் பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் ப்ளாக் ஏற்படுத்த முடியவில்லையென்றாலும் ஏற்கனவே வட்டார திட்டங்களின் மூலம் கவனம் செலுத்தப்படுகிறது.

போலிஸ் ஸ்டேஷன் வல்லம் (செஞ்சி தாலூகா)

***315 கேள்வி—திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா வல்லம் கிராமத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் திறக்க உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் எப்போது திறக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

பஞ்சாயத்து யூனியன்கள்

316. கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இப்போது தாலூகாவுக்கு மூன்று என்ற விகிதத்தில் இருக்கும் பஞ்சாயத்து யூனியன்கள், தாலூகாவுக்கு இரண்டு அல்லது ஒன்று என்ற விகிதப்படி குறைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to reduce the number of Panchayat Unions.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும் அலுவலர்கள் நிறைய இருக்கிறார்கள். நிர்வாகச் செலவு அதிகமாக ஆகின்றன. நெருக்கடி நிலைமையை ஒட்டியாவது செல வினங்களைக்குறைக்க ஒரு திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன்களை அதிகப் படுத்தினல் செலவு அதிகமாகும். கனம் அங்கத்தினர் கருத்து நிறை வேற்றப்படவேண்டுமென்ருல் பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கை இப்படியேதான் இருக்க வேண்டும்.

திரு. சி. ம. அம்பிகாபதி : தாலுகாவுக்கு மூன்று ப்ளாக் என்று இருப்பதை ரேஞ்சுக்கு ஒரு ப்ளாக் என்று ஏற்படுத்த முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இருக்கின்ற எண்ணிக்கையை அதிகப் படுத்துவதற்கில்லை.

புலவர் கா. கோவிந்தன் : பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கையை குறைக்கவேண்டுமென்பது என் கேள்வி. அதிகப் படுத்தவேண்டுமென்று கேட்பதாக நினைத்து கனம் அமைச்சர் பதில் சொல்வதாகத் தெரிகிறது. இவற்றைக் குறைக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டம் சரியாக நடைபெற வேண்டுமென்ருல் இதைக் குறைக்கவும் முடியாது. அதிகப்படுத்தவும் வேண்டாம். ஏதாவது குறிப்பிட்ட மாவட்டம் சம்பந்தப்பட்டவரை என்ருல் அவ்வப்போது அது பரிசீலனை செய்யப்படும். அதுவும் பஞ்சாயத்து பொது தேர்தல் வருகிற காலத்தில் ஜனவிகிதாசார கணக்கு எடுக்கப்படும். அப் போது இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

அரசாங்க சைக்கிள் தொழிற்சாலை (தஞ்சாவூர்)

* 318 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சையில் உள்ள அரசாங்க சைக்கிள் தொழிற்சாலையின் மூல தனமும் உற்பத்தி இலக்கும் என்ன ?

(இ) 1963–ம் ஆண்டு ஜனவரி மாதம் **1–ந்** தேதி வரை எத்தனை சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1. (*a*) The capital invested in the Cycle Assembly Unit, Thanjavur, is as follows :—

(1) Land and Buildings, Rs. 1,27,426.

(2) Machinery and Equipment, Rs. 3,15,498.

(*b*) *Targeted production*.—The ultimate target is to assemble 5,000 cycles per annum when the unit goes into full production. During the year 1962–63 it is expected to assemble 1,000 cycles. The production will be increased to 3,000 cycles per annum during 1963–64.

2. The number of bicycles assembled so far upto 1st January 1963 is 372.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஏறக்குறைய **5** லட்சம் ரூபாய் முதலீடு செய்து இந்தத் தொழிலை ஆரம்பித்திருக்கிருேம். ஆனல் சென்ற ஆண்டு க்கு **300** சொச்சம் சைக்கிள் தான் உற்பத்தியாகியிருக்கிறதென்ருல் இதில் என்ன குறைபாடு, எங்கே இருக்கிறது ? ஐந்தாயிரம் சைக்கிள் உற்பத்தி செய்யவேண்டுமென்பது நம்முடைய இலக்காக இருந்தும் இவ்வளவு குறைவாக உற்பத்தி செய்யப்பட்டிருப்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விளக்கம் கொடுக்கத் தேவையே இல்லை. எந்தத் தொழிலாக இருந்தாலும் அப்படித்தான் இருக்கும். இயந்திரங்கள் எல்லாம் கொண்டு வந்து வைத்தவுடன், அவ்வாண்டி